DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**CC.No.102 /2017**

| Deposition of the for | : | PW 6 | Caste | : | |
|---|---|---|---|---|---|
| Name | : | அசோக் குமார் | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 29th day of December 2022.
29.12.2022.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சென்னை பெருநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் பெண்களுக்கு எதிரான குற்ற தடுப்பு பிரிவில் காவல் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் இராமேஸ்வரம் நகர காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது இராமேஸ்வரம் நகர காவல் நிலைய குற்ற எண். 13/2016 பிரிவு 279. 337, 304(A) iPC வழக்கில் வழக்கு கோப்பை என் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடமான ராயல்பார்க் ஹோட்டல் முன்புறம் சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தேன்.

2. பின்பு இறந்துபோன கவாஸ்கர் என்பவர் அரசு மருத்துவமனை சென்று சவகிடங்கில் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை அன்றுதினம் 19.30 முதல் 20.30 மணிவரை விசாரணை செய்து சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் சம்பந்தப்பட்ட எதிரியை 21.02.2016-ம் தேதி மாலை 5.00 மணிக்கு இராமேஸ்வரம் பஸ் நிலையம் முன்பு வைத்து கைது செய்து, நிலையம் கொண்டு வந்து அன்றையதினமே தக்க ஜாமினில் விடுவித்தேன். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனங்களை அறிக்கை பெற வேண்டி முறைப்படி அனுப்பிவைத்தேன். இவ்வழக்கில் இறந்துபோன கவாஸ்கர் என்பவர் மீது பிரேத அறிக்கை பெற்று, பிரேத அறிக்கை வழங்கிய அரசு மருத்துவர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்பு வழக்கினை விசாரிணை செய்து சம்பவம் உண்மை என தெரியவந்ததால் 27.09.2017-ம் தேதி எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து விபத்து நடந்தது தெரியும் என்றால் 4 மணி நேரம் கழித்து தெரியவந்தது. முதல் தகவல் அறிக்கையில் எதிரியின் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் புகாரிலும் எதிரியின் பெயர் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதாவது புகாரில் பாரி பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போட்டுவிட்டு ரோட்டை கடக்கும் போது விபத்து நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. பொதுவாக பாரி பெட்ரோல் பல்கில் இருந்து ரோட்டை கடக்க வேண்டும் என்றால் வாகனத்தை ஓட்டி சென்றவர் ரோட்டை பார்த்து நிதானமாக கடக்க வேண்டும் என்றால் சரிதான். சம்பவ நடந்த இடத்திற்கு நான் போகும் போது புகார்தாரர் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். அதேபோல் சம்பவ இடத்திற்கு அருகாமையில் இராமேஸ்வரம் டோல்கேட் உள்ளது என்றால் சரிதான். 10 மீ தொலைவில் தான் இருக்கிறது என்றால் சரிதான். இராமேஸ்வரம் டோல்கேட்டில் பேரிகார்டு அமைக்கப்பட்டு வாகனத்தை நிப்பாட்டி வசூல் செய்வார்கள் என்றால் சரிதான். அதேபோல் அங்கு கேட் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. மோட்டார் வாகன அறிக்கையில் அரசு பேருந்திற்கு எந்தவிதமான சேதாரமும் இல்லை என சான்று கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதேபோல் இருசக்கர வாகனத்திற்கும் எந்த விதமான சேதாரமும் இல்லை என சான்று கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபருக்கு ஓட்டுனர் உரிமம் மற்றும் இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் இராமேஸ்வரம் நகர் காவல் நிலையத்திற்கும் சுமார் 2 கீமீ தூரம் என்றால் சரிதான். இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் பிரோத பரிசோதனை செய்ய எத்த மணிக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன் என்றால் 21.02.2016-ம் தேதி 05.45 மணிக்கு கொடுத்தேன். இராமேஸ்வரம் பேருந்து நிலையத்தில் இருந்து சம்பவ நடைபெற்ற இடத்திற்கு அரசு பேருந்து மிதமான வேகத்தில் 5 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான்.அதேபோல் இராமேஸ்வரம் நகராட்சியில் பேரிகார்டு அமைக்கப்பட்டிருப்பதால் பேருந்து அதிகவேகமாக செல்வதற்கு வாய்ப்புகள் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அருகில் நகராட்சி டோல்கேட்டில் பணிபுரிபவர்களையோ, ராயல் பார்க் ஹோட்டலில் பணிபுரிவோர்களையோ, பாரிராஜன் பெட்ரோல் பல்கில் பணிபுரிபவர்களையோ இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த சாட்சிகளை சேர்ந்திருந்தால் உண்மை தன்மை தெரிந்துவிடும் என்பதால் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

4. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் அதிகமாக கூட்டம் கூடக்கூடிய பகுதி என்றால் சரியல்ல. வழக்கின் அலுவலக சாட்சிகள் தவிர மற்ற சாட்சிகள் அனைவரும ஒரே சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். அதேபோல் அன்றைய தினம் எதிரி அரசு பேருந்தை எதிரிதான் ஓட்டி

சென்றார் என்று அவருடைய பணிபுரிந்த நடத்துனரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அந்த அரசு பேருந்தில் பயணம் செய்த பயணிகள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவ நடந்த இடத்தில் இருந்து எந்த வாகனத்தில் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்களோ அந்த வாகனத்தின் ஓட்டுனரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அரசு பேருந்தை இராமேஸ்வரம் நகர் காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு, எந்த தேதியில் கொண்டுவரப்பட்டது என்றால் 01.02.2016-ம் தேதியன்று நிலையம் கொண்டுவரப்பட்டது.

5. உண்மையில் இந்த விபத்து அரசு பேருந்தால் மட்டும் நடந்திருந்தால் அன்றைய தினமே அரசு பேருந்தை காவல் நிலையத்திற்கு கொண்டு வந்திருப்பேன் என்றால் சரியல்ல. அதேபோல் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த புகார்தாரர் எந்த மருத்துவமனையிலும் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். அதேபோல் எதிரியின் பெயர், மற்றும் முகவரி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சிகளை எத்தனை மணிக்கு விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரி அரசு பேருந்தை அதிவேகமாக ஓட்டி செல்லவில்லை, அவரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் விபத்து ஏற்பட்டிருந்தால் புகார்தாரருக்கு சிறு காயமாவது ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. புகார்தாரர் ஓட்டுனர் உரிமம் இல்லாமல் அதிகவேகமாகவும், கவனக்குறைவாகவும், வாகனத்தை முறையாக ஓட்டாமலும், ஏதோ ஒரு வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் முறையாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்களை அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.